ORIGINAL ARTICLE

# பத்துப்பாட்டில் அளபெடை வடிவங்கள் [PATTUPPĀṬṬIL AḶAPEṬAI VAṬIVAṄKAḶ]

## ALAPEDAI FORMAT IN PATTUPADDU POEM

**கி.பாலமுருகன் / K.Balamurugan *[1]**

[1] Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam, Tamilnadu, India. Email: balamurugankmy@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/145

**Abstract**

The Sangam literature provides very valuable information on the social, economic and political life of the Tamil society. Sanga kaalam (Sangam age) is considered to be the Golden Age of Tamil Literature. The study aims to collect and quantify the scales found in the decimal texts and to classify their types such as verbal, melody, and verbal scales, to distinguish the scales from the following places first, middle, and last, and to look at the measurements at the high level and to identify and measure the measurements in the decimal. The Ten Idylls, known as Pattuppāṭṭu or Ten Lays, is an anthology of ten longer poems in the Sangam literature – the earliest known Tamil literature. They range between about 100 and 800 lines, and the collection includes the celebrated Nakkīrar's Tirumurukāṟṟuppaṭai (lit. "Guide to Lord Murukan"). The collection was termed as "Ten Idylls" during the colonial era, though this title is considered "very incorrect" by Kamil Zvelebil – a scholar of Tamil literature and history. He suggests "Ten Lays" as the more apt title. Five of these ten ancient poems are lyrical, narrative bardic guides (arruppatai) by which poets directed other bards to the patrons of arts such as kings and chieftains. The others are guides to religious devotion (Murugan) and to major towns, sometimes mixed with akam- or puram-genre poetry.

**Keywords:** Melody, Rhyme, Metre, Feelings and deeds, Ten lays

**ஆய்வுச் சாரம்**

சங்க இலக்கியம் பல செல்வங்களை அள்ளிக் கொடுத்துள்ளது. அது சமூகம், பொருளியல் மற்றும் அரசியல் பற்றி அறிந்துகொள்வதாகும். சங்க காலம் என்பது தமிழர்களின் பொற்காலம் எனலாம். பத்துப்பாட்டு நூல்களில் காணலாகும் அளபெடைகளைச் சேகரித்து வகை தொகை செய்து அதன் வகைகளான செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை அளபெடைகளை வகை தொகை செய்தலும், அளபெடைகள் பயின்று வரும் இடங்களான முதல், இடை, கடை எனப் பிரித்து அறிதலும் மேலும் தொடை நிலையில் அளபெடையினைப் பார்த்து அளபெடை

விகற்பங்களைப் பத்துப்பாட்டில் கண்டறிந்து ஆய்வு செய்வதாகவும் இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது. பத்துப்பாட்டு என்பது சங்க இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படும் பழந்தமிழ் நூல்களின் தொகுப்புகளுள் ஒன்றாகும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இவை இரண்டும் பதினெண் மேல்கணக்கு நூல்களாகும். இவற்றுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நூல்கள் அடங்கிய தொகுப்பே பத்துப்பாட்டு என வழங்கப்படுகிறது. இவை அனைத்தும் இன்று ஒரே தொகுப்பாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இவை ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை. வெவ்வேறு ஆசிரியர்களால் பல்வேறு கால கட்டங்களில் இயற்றப்பட்டவை. பத்துப்பாட்டு எனச் சேர்த்துக் குறிப்பிடும் வழக்கமும் பிற்காலத்தில் எழுந்ததென்பதே பலரது கருத்து. இந்த அரிய தொகுப்புக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

**கருச்சொற்கள்:** செய்யுளிசை, இன்னிசை, அளபெடை, அகம், புறம், பத்துப்பாட்டு

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 3rd March 2021, revised 24th March 2021, accepted 10th April 2021

## முன்னுரை

செய்யுள் உறுப்புகளில் ஒன்று அளபெடை என்னும் உறுப்பாகும். செய்யுளில் ஓசை குறையுமானால் அதனை ஈடு செய்ய எழுத்துக்கள் தனக்குரிய மாத்திரையில் இருந்து நீண்டு ஒலிக்கும் கற்றறிந்த புலவர் பெருமக்கள் தங்கள் இயற்றியுள்ள இலக்கியங்களில் அளபெடையினை ஒரு உறுப்பாக சேர்த்து புலவர்கள் பத்துப்பாட்டில் பயன்படுத்தியுள்ள பாங்கை ஆய்வு செய்கிறது இவ் ஆய்வு கட்டுரை.

## அளபெடை

அளபு என்றால் அளவு எனவே அளவு + எடை – அளபெடை என்பது ஒலியளவை அதிகமாக எடுப்பது என்று பொருள்படும். இதை அளபு + அடை – அள பபெடை என்றுங் கூறுவது உண்டு. அப்பொழுது ஒலியளவை அதிகமாக அடைவது என்று பொருள்படுவதாகும்.

தமிழ் உயிரெழுத்துக்கள் குறில் ஒரு மாத்திரை, நெடில் இரண்டு மாத்திரை மெய்யெழுத்தின் அளவு அரை மாத்திரை ஆகும். தொல்காப்பியர் மூன்று மாத்திரை கொண்ட எழுத்துக்கள் தமிழில் இல்லை என்கிறார். மேலும் மூன்று மாத்திரையில் இருக்க வேண்டுமானால்,

> **"**நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
> கூட்டி எழுஉதல் என்மனார் புலவர்**"** (Tholkappiyam, 1969)[1]

என நீட்டி ஒலிக்க வேண்டும் என்கிறார். அவரே மொழி மரபில் மீண்டும் அளபெடையினைப் பற்றி கூறும்பொழுது குன்றிய ஓசையுடைய சொல்லினிடத்தே நெட்டெழுத்தின் பின்னர் அவற்றின் இனம் ஒத்த குற்றெழுத்துகள் அவ்வோசையை நிறைவு செய்யும் என்பதை,

"குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்
நெட்டெழுத்து இன்பர் ஒத்தகுற் றெழுத்தே" (Tholkappiyam, 1969)[1]

என்ற நூற்பா வாயிலாக அளபெடையின் இலக்கணத்தை உணர்த்தியுள்ளார். இதன் அடிப்படையில் அளபெடை என்ற ஒரு உறுப்பைப் பத்துப்பாட்டில் பொருத்திப் பிரித்து அதன் வகைகள், பயின்று வரும் இடங்கள், அளபெடை தொடைகள் ஆகியவற்றைப் பின்வருமாறு காணலாம்.

### அளபெடை வகைகள்

தொல்காப்பியம் அளபெடை வகையினைப் பற்றிக் கூறவில்லை. நன்னூல் உரையாசிரியர்களான ஆறுமுகநாவலர் தான் அளபெடை வகையினைப் பதிவு செய்துள்ளார். நன்னூல் அளபெடையினைப் பற்றி கூறும்பொழுது

"இசை கெடின் மொழிமுதல் இடை கடை நிலை கெடின்
அளபெழும் அவற்றவற் றினக் குறில் குறியே" (Nannool, 2006)[2]

என சுட்டுகின்றது. இதற்கு உரை எழுதிய ஆறுமுகநாவலர் அளபெடைக்கான இலக்கணத்தைக் கூறிவிட்டு பிறகு அளபெடை வகைகள் இரண்டு. ஒன்று உயிரளபெடை மற்றொன்று ஒற்றளபெடை என வகையினைத் தந்துள்ளார். மேலும் உயிரளபெடையின் வகைகளாக, செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை, வேறுபாட்டு அளபெடை, இயற்கை அளபெடை என ஐந்து வகைகளைச் சுட்டியுள்ளார். நன்னூல் உரை கூறியுள்ள செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை அளபெடைகளைப் பத்துப்பாட்டு நூல்களில் காணப்படும் அளபெடை வடிவங்களோடு பொருத்து இவண் ஆராயப்படுகிறது.

### செய்யுளிசை அளபெடைகள்:

சீரும் தளையும் சிதையாமல் இருக்க அளபெடுப்பது செய்யுளிசை யாப்பினை நோக்காகக் கொண்டது. அளபெடுப்பது இது. அசைநிறை அல்லது இசைநிறை அளபெடையாகும். இவ்வளபெடையானது பத்துப்பாட்டு நூல்களில் 105 இடங்களில் இடம் பெற்றுள்ளது.

"மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேற்கியார்க் கும்மே யொருமுகம்"
(Pathupattu, Thirumurukatrupadai, 1974)[3]

"யாவரும் வரும் வெனோருந் தம்மென
வரையா வாயிற் செறாஅ திருந்து" (Pathupattu, Mathuraikanchi, 1974)[3]

இவ் அடிகளில் காணப்டும் வழாஅ, செறாஅ போன்ற சொற்கள், செய்யுளிசை அளபெடைகள் ஆகும். இதனைப் போன்றே திருமு- 9, பொருந – 10, சிறுபான்- 8, பெரும்பாண் - 8, முல்லை – 4, மதுரை – 20, நெடு -2, குறிஞ்சி – 12, பட்டி – 6, மலைபடு – 26 இடங்களில் செய்யுளிசை அளபெடை பத்துப்பாட்டில் உள்ளன.

### இன்னிசை அளபெடை:

செய்யுளில் ஓசை கெடாத பொழுது இனிய ஓசை புலப்படுத்துவதற்காக நெட்டெழுத்துக்கள் நீண்டு ஒலிப்பது இன்னிசை அளபெடை இவ் அளபெடையே இலக்கியக் கூறாகிய உணர்ச்சிப்

பணியைக் கவிதையில் சிறப்பாகச் செய்கின்றது. இவ்வளபெடையானது பத்துப்பாட்டில் 81 இடங்களில் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

"முந்துநீ கண்டுழி முகனமர்ந்த தத்தில்
கைதொழுஉம் பரவிக் காலுற வணங்கி"
(Pathupattu, Thirumurukatrupadai, 1974)[3]

"அயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை
வெயில்புறந் தரூஉ மின்ன லியக்கத்துக்"
(Pathupattu, Malaipadukadam, 1974)[3]

இவ் அடிகளில் உள்ள கைதொழூஉ, தரூஉ போன்ற சொற்கள் உணர்ச்சியை வெளிப்படுத்துவதுதாக உள்ளது. இவை இன்னிசை அளபெடை ஆகும். இவ்வளபெடையானது. திருமு – 4, பொருந – 3, சிறுபா- 4, பெரும்பாண் - 13, முல்லை – 3, மதுரை – 22, நெடுநல் - 8, குறிஞ்சி – 2, பட்டின – 5, மலைப்படு – 17 இடங்களில் இன்னிசை அளபெடை இடம்பெற்றுள்ளது.

**சொல்லிசை அளபெடை:**

சொல்லின் பொருளை வேறுபடுத்துவதற்காக அளபெடுப்பது. பெயர்ச்சொல்லை வினை எச்சமாக மாற்ற வருவது சொல்லிசை அளபெடை ஆகும். சொல்லிசை சொற்பொருள் அடிப்படையில் அமைவது இவ்வளபெடை பத்துப்பாட்டில் 187 இடங்களில் அமையப் பெற்றுள்ளது.

"செண் விளங் கியற்கை வான்மதி தசைஇ
அகலா மீனி னவிர்வன விமைப்பத்" (Pathupattu, Thirumurukatrupadai, 1974)[3]

"சுரன்முதன் மராஅத்த வலிநிழ லசைஇ
துவீ ழிகுபெய லழகுகொண் டருளி" (Pathupattu Sirupanatrupadai, 1974)[3]

இவ்வடிகளில் காணப்படும் கவைஇ, அசைஇ போன்ற சொற்கள் சொல்லிசை அளபெடை ஆகும், இவ்வளபெடையானது திரு- 22, பெருணர் -9, சிறுபாண் - 11, பெரும்பாண் - 28, முல்லை – 6, மதுரை – 35, நெடுதல் - 20, குறிஞ்சி – 16, பட்டின – 13, மலைபடு – 27 இடங்களில் புலவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அளபெடை பயின்று வரும் இடங்கள்:**

தொல்காப்பியம் அளபெடையினைக் கூட்டி எழூஉக எனச் சொல்ல பின்வந்த நன்னூல் அதன் வகைகளையும் அவை பயின்று வரும் இடங்கள் பற்றியும் கூறியுள்ளது, இதனை

"இசைகெடின் மொழிமுதல், இடை, கடை, நிலை கெடில்
அளபெழும் அவற்றவற் றினக் குறில் குறியே" (Nannool, 2006)[2]

என நன்னூல் சுட்டுகிறது. உயிர் எழுத்துக்களில் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்குமிடத்துத் தனிநிலை, முதனிலை, இடைநிலை, இறுதிநிலை யென்னும் நான்கனோடு கூட்டி உழமும் என்கிறது நேமிநாதம். (Neminatham)[4] மேலும்,

"ஒற்றெழுத் தளபெடை என ஒரு முன்றாய்
மொழி முதல் இடை, கடை மூன்றினும் வருமே" (Ilakkana Kothu, 1990)[5]

என இலக்கணக் கொத்தும் அளபெடை பயின்வரும் இடங்களைச் சுட்டுகின்றது. முதல்நிலை அளபெடையானது பத்துப்பாட்டில் 95 இடங்களிலும், இடைநிலை அளபெடையானது 209 இடங்களில், இறுதி நிலை அளபெடையானது 109 இடங்களிலும் என 413 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

**முதல் நிலை அளபெடை**

மொழிக்கு முதலில் நின்ற எழுத்து அளபெழுவது முதனிலை அளபெடை ஆகும். சான்று,

**“**வரையர மகளிரிந் தூஅய் விழைதக**”** (Pathupattu, Kurinchipattu, 1974)[3]

மீழிசை நகமாக கடற்படர்ந் தாஅங்**”** (Pathupattu, Malaipadukadam, 1974)[3]

இவ்வடிகளில் உள்ள சொற்களின் முதலில் உள்ள எழுத்து அளபெடுத்ததால் முதல்நிலை அளபெடை ஆயிற்று. இவ்வளபெடை பத்துப்பாட்டில் திருமு – 10, பொருந – 2, சிறுபா-1, பெரும்பா- 4, முல்லை – 2, மதுரை – 22, நெடுநல் - 3, குறிஞ் - 6, பட்டின – 6, மலைபடு – 12, என 209 இடங்களில் பயின்று வந்துள்ளது.

**இடைநிலை அளபெடை**

ஒரு சீரில் இடையில் உள்ள எழுத்துகள் அளபெடுத்து வருவது இடைநிலை அளபெடை ஆகும்.

**“**பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்**”** (Pathupattu, Nedunalvadai, 1974)[3]

“மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்**”** (Pathupattu, Patinapalai, 1974)[3]

இவ்வடிகளில் உள்ள சொற்களில் இடையில் உள்ள எழுத்து அளபெடுத்துள்ளது. இவ்வளபெடையானது திருமு- 27, பொருந – 15, சிறுபாண் - 13, பெரும்பான் - 33, முல்லை – 8, மதுரை – 43, நெடுநல் - 20, குறிஞ் - 15, பட்டின – 15, மலைபடு – 20 என 209 இடங்களில் காணப்படுகின்றது.

**இறுதி நிலை அளபெடை:**

ஒரு சீரில் இறுதி எழுத்து அளபெடுத்து வருவது இறுதிநிலை அளபெடை ஆகும்.

“மந்திர விதியின் மரபுளி வழாஅ” (Pathupattu, Thirumurukatrupadai, 1974)[3]

“கூடத் தின்னிசை வெரீஇ மாடத்” (Pathupattu, Perumpanatrupadai, 1974)[3]

எனும் அடிகளில் உள்ள வழாஅ, வெரீஇ ஆகிய சொற்களின் இறுதி எழுத்து அளபெடுத்துள்ளது. இதனைப் போலவே திருமு – 10, பொருநர் - 6, சிறுபா – 9, குறிஞ்சி – 15, முல்லை – 2, மதுரை-21, நெடுநல் - 8, குறிஞ்சி – 12, பட்டி -5, மலைபடு – 21 இடங்கள் என 109 இடங்களில் பத்துப்பாட்டில் இறுதிநிலை அளபெடையானது பயின்று வந்துள்ளது.

**அளபெடைத் தொடை:**

“தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்” எனும் பழமொழி கவிதை தொடையின் சிறப்பினை எடுத்து இயம்புகின்றது. மக்களின் வாழ்வியல் சூழலை எடுத்து கூறும் சங்க நூலான பத்துப்பாட்டினை உருவாக்கிய புலவர் பெருமக்கள் தொடை என்ற உறுப்பை முதன்மையாகவும்

அதன் வகைகளின் ஒன்றான அளபெடை தொடையினைத் தங்கள் பாடல்களில் சேர்த்துப் பாடல்களை வடிவமைத்துள்ளனர். (K. Sarveswaran, G. Dias and M. Butt.2018)[6] தொல்காப்பியம் தொடை வகையினைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது மோனை, எதுகை, முரண், இயைபு என நான்கையும் முதலில் கூறிவிட்டுப் பிறகு அளபெடையினையும் சேர்த்து ஐந்து எனக் கூறுகின்றது இதனை,

"மோனை, எதுகை முரண் இயைபு என
நூல்நெறி மரபிள தொடை வகை என்ப" (Tholkappiyam, 1969)[1]
"அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்" (Tholkappiyam, 1969)[1]

என்ற நூற்பா வழி அறியலாம். அளபெடைத் தொடையினை இரு வகைகளாக வகைப்படுத்தலாம். அவை அடிநிலை அளபெடை தொடை, சீர்நிலை, அளபெடைத் தொடை ஆகும்.

## அடிநிலை அளபெடைத் தொடை:

செய்யுளில் அடிதோறும் முதல் சீரில் அளபெடுத்து ஒன்றி வருவது அடிநிலை அளபெடைத் தொடை ஆகும். இவ் அடிநிலை அளபெடைத் தொடை பத்துப்பாட்டில் நூல்களில் காணப்படுகின்றன. பொருந – (103-140) சிறுபான் - (56-57), மதுரை (177-178), குறிஞ்சி (229-230), பட்டின (42-43), (115-117), மலைபடு – (168-169), (215-216), (348-349), (363 - 365), (515-517) ஆகிய இடங்களில் பயின்று வந்துள்ளது.

"மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நனீநீர் முத்தம்" (Pathupattu, Serumpanatrupadai, 1974)[3]

இவ் இரண்டு அடிகளிலும் அடி அளபெடை தொடை பயின்று வந்துள்ளதைக் காண முடிகின்றது.

## சீர் நிலை அளபெடைத் தொடை:

சங்கப் பாடல்கள் யாவும் ஈரசைச் சீர், மூவசைச்சீர் நாலசைச்சீர் எனச் சீர்களைக் கொண்டு அமைந்துள்ளன. இச்சீர்களில் அளபெடை பயின்று வருவதைச் சீர்நிலை அளபெடைத் தொடை எனலாம். இவ் அளபெடைத் தொடையினை இரண்டு வகையாகக் கூறலாம். அவை இடம் இருந்து வலம், வலம் இருந்து இடமாகச் சீர்கள் அளபெடுத்தல் ஆகும். Schiffman, H. (1998)[7]

சங்கப் பாடல்களில் பெரும்பாலும் அடிநிலை தொடைகள் மிகுதியாக பயின்று வந்துள்ளன. விகற்ப தொடைகளான இணை, பொழிப்பு. ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்ற ஏழும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இவ் விகற்பங்களைப் பத்துப்பாட்டில் இடம் பெரும்பாங்கை பார்க்கும் பொழுது இணை அளபெடையானது ஒரு அடியில் முதல் இரு சீர்களில் அமையப் பெறுவது ஆகும். இவ் அளபெடையானது பத்துப்பாட்டில் காணப்பெறவில்லை.

**பொழிப்பு அளபெடை (1-3):**

ஓர் அடியில் முதல் சீரிலும், மூன்றாம் சீரிலும் அளபெடை பயின்று வருவது பொழிப்பு அளபெடை ஆகும்.

**"**கன்றுகடாஅ வுறுக்கு மகாஅ ரோதை**"** (Pathupattu, Malaipadukadam, 1974)[3]

இவ் அடியில் முதல் சீரிலும், மூன்றாம் சீரிலும் அளபெடை உள்ளதைக் காணலாம். இப்பொழிப்பு அளபெடை பொருநர் – 177, பெரும்பாண் - 48, பட்டின – 210, மலைபடு – 215 ஆகிய அடிகளில் காணப்படுகிறது.

**ஒரூஉ அளபெடை (1-4):**

முதல் சீரிலும் நான்காம் சீரிலும் ஒரு அடியில் அளபெடை அமைவது ஒரூஉ அளபெடை ஆகும். இவ் அளபெடை குறிஞ்சிப் பாட்டில்,

**"**பெறாஅன் பெயரினு முனிய செறாஅ**"** (Pathupattu, Kurinchipattu, 1974)[3]

என்ற ஓர் அடியில் மட்டும் காணப்படுகின்றது.

**கூழை அளபெடை : (1-2-3)**

ஓர் அடியில் முதல் மூன்று சீர்களிலும் அளபெடை பயின்று வருவது கூழை அளபெடை ஆகும். இக்கூழை அளபெடைத் தொடை பத்துப்பாட்டில் நெடுநல் வாடையில் ஓர் இடத்தில்

**"**பரூஉத்தரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி**"** (Pathupattu, Nedunalvadai, 1974)[3]

என்ற அடியில் மட்டும் காணப்படுகின்றது.

**பின் அளபெடை (2-4) (வலம் இருந்து இடம்)**

நான்கு சீர்களைக் கொண்ட ஓர் அடியில் இரண்டாவது சீரிலும் நான்காவது சீரிலும் அளபெடை பயின்று வருவது பின்அளபெடை ஆகும்.

**"**பல்வேறு குழூஉக்கொடி மதாண் நிலைஇவ்**"** (Pathupattu, Mathuraikanchi, 1974)[3]

இவ் அடியில் இரண்டாம் சீரிலும் நான்காம் சீரில் அளபெடை பயின்று வந்துள்ளது.

இதனைப் போலவே குறிஞ்சிப்பாட்டில் (அடி – 98) ஓர் இடத்திலும் பின் அளபெடை பயின்று வந்துள்ளது.

**நிறைவுரை:**

- செய்யுளில் தக்க ஓசை வேண்டி நீட்டலாம். நீட்டியபின்னர் இசை நிறைத்து நிற்க இனமான குற்றெழுத்தை இட வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்து. நன்னூலார் தொல்காப்பியர் கூறியதை ஏற்றும் சொல்லின் முதலிலும், இடையிலும், கடையிலும் அளபெடை பயின்று வரும் என்பதை சேர்த்து கூறுவதை அறிந்துணர முடிகின்றது.
- பத்துப்பாட்டில் செய்யுளிசை அளபெடை 105 இடங்களிலும் இன்னிசை அளபெடை 81 இடங்களிலும் சொல்லிசை அளபெடை 187 இடங்களிலும் இடம் பெற்றுள்ளன.

- நன்னூலார் கூறும் முதல் இடை கடை ஆகிய இடங்களில் பயின்று வரும் அளபெடைகளாக முதல்நிலை அளபெடை 95 இடங்களிலும், இடைநிலை அளபெடை – 209 இடங்களிலும், இறுதிநிலை அளபெடை – 109 இடங்களிலும் புலவர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது இங்கு தெரிகின்றது.
- பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுபடாஅம் ஆகிய ஆறு நூல்களில் அடிநிலை அளபெடை காண முடிகின்றது.
- சீர்நிலை அளபெடைத் தொடையில், இணை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவை பத்துப்பாட்டில் இடம் பெறவில்லை பொழிப்பு, ஒரூஉ, கூழை ஆகியனவும் உரையாசிரியர் கூறும் பின் அளபெடையும் பத்துப்பாட்டில் காணப்படுவதை அறிந்துணர முடிகின்றது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Ilampuranar. (1969). *Tholkappiyam.* Thanjaur: Karandai Pulavar College.
2. Thirugnanasampandam, S. (2006). *Nannol – Ezhuthu* [Nanool - orthography]. Thiruvaiyaru: Kathir Pathipakam.
3. Swaminathaiyar. (1974). *Pathupattu*. Thiruvanmiyur: Dr.U.Ve. Swaminathaiyar Book House.
4. Govindarasa mudaliyar. *Neminatham*. Thirunelveli: Saiva Sithanda Noor Pathipu Kazhagam.
5. Gopalaiyar. (1990). *Ilakkana kothu* [Tamil Grammar]. Thanjaur: Saraswathi Mahal Noolagam.
6. K. Sarveswaran, Dias and Butt. (2018). "*ThamizhiFST: A Morphological Analyser and Generator for Tamil Verbs*," 3rd International Conference on Information Technology Research (ICITR), 2018, pp. 1-6, doi: 10.1109/ICITR.2018.8736139.
7. Schiffman. (1998). *Standardization or Restandardization: The Case for "Standard*" Spoken Tamil. Language in Society, 27(3), 359-385. Retrieved June 13, 2021, from http://www.jstor.org/stable/4168850